Scan the code using ‘e Courts Services’
mobile application download from play store

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.**

முன்னிலை : **திரு.சி.ஸ்ரீதர், பிஎஸ்ஸி., பி.எல்.,**
(JO Code : TN01286)
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருப்பூர்.

**2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ம் நாள் வியாழன்கிழமை.**
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 19 ம் நாள்

**குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 76/2021**
[CNR No.TNTI180030112021]

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் (விரைவு) நீதிமன்றம், திருப்பூர். |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | S.T.C. No.215/2018 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | M/s.லாலி பாலி வென்ச்சர்ஸ்,<br>அதன் உரிமையாளர் S.P.பிரகாஷ், **(இறந்துவிட்டார்)**<br>மேல்முறையீட்டாளருக்காக அவரது மனைவி நான்சி பிரகாஷ். க/பெ. S.P.பிரகாஷ்<br>S.F. No.69, T.S.K. நகர்,<br>K.N.P. காலனி அஞ்சல்,<br>தாராபுரம் ரோடு, திருப்பூர் – 641 608. |
| எதிர் மேல்முறையீட்டாளரின் பெயர் | M/s.சிவா டெக்ஸ்யார்ன் லிட்,<br>Rep. by its Authorized Signatory N.கோபால்சாமி,<br>G.S. No.371/5, காரணம்பேட்டை,<br>கரடிவாவி ரோடு, பருவாய் அஞ்சல்,<br>கோயம்புத்தூர் – 641 043. |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | எதிரிக்கு தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. |
| தண்டனை உறுதி செய்யப்பட்டதா, மாற்றிமைக்கப்பட்டதா, அல்லது ரத்து செய்யப்பட்டதா? | உறுதி செய்யப்பட்டது. |
| மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 05.10.2021 |

Scan the code using 'e Courts Services'
mobile application download from play store

| | |
|---|---|
| ஆஜராக பணிக்கப்பட்ட நாள் | ------ |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | **முடிவாக,** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் S.T.C.No.215/2018 வழக்கில் 27.09.2021ம் தேதியில் மேல் முறையீட்டாளர்/ எதிரிக்கு எதிராக வழங்கிய சிறை தண்டனை அற்றுபோய் விட்ட நிலையில், காசோலை தொகையை இழப்பீடாக புகார்தாரருக்கு வழங்க வேண்டும் என்ற விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிப்படுத்தி உத்தரவிடப்படுகிறது. |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பாக கடந்த 13.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.பன்னீர்செல்வம் அவர்களும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார் அவர்களும் ஆஜராகி வழக்கு நடத்தியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**விசாரணை நீதிமன்றத்தில் எதிர் மேல்முறையீட்டாளர்/ புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகாரின் சுருக்கம் :**

2. புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் தனி புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரரின் நிறுவனமானது நிறுவன சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட பொதுத்துறை நிறுவனம் என்றும், மேற்படி நிறுவனத்தின் நிர்வாக அதிகாரிக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி புகார்தாரரின் நிறுவனம் Shiva Texyarn Limited என்ற பெயரில் நூல் நூற்கும் தொழிலை செய்து வருவதாகவும், மேற்படி எதிரியானவர் மேற்படி புகார்தாரர் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களில் ஒருவர் என்றும், மேற்படி

Scan the code using 'e Courts Services'
mobile application download from play store

எதிரியானவர் நூற்க்கப்பட்ட மற்றும் பகுதி நூற்க்கப்பட்ட பஞ்சுகளை கடன் அடிப்படையில் வாங்கி செல்வார் என்றும், அந்த வகையில் 16.08.2017 முதல் 28.08.2017 வரை மேற்படி தொழில் சம்பந்தமாக எதிரி புகார்தாரரின் நிறுவனத்திற்கு ரூ.9,98,358/–ஐ வழங்க வேண்டியிருந்தது என்றும், அதற்கு புகார்தாரரும் தொடர்ச்சியாக மேற்படி தொகையை செலுத்துமாறு கூறிய நிலையில், இறுதியாக 25.09.2017ம் தேதியன்று எதிரியானவர் 01.10.2017ம் தேதியிட்ட காரணம்பேட்டை, கனரா வங்கி கிளையின் காசோலை ஒன்றை ரூ.9,98,358/– வழங்கியதாகவும், மேற்படி தொகையை 06.11.2017ம் தேதி திருப்பூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்ட போது 07.11.2017ம் தேதியன்று போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதை இந்த எதிரிக்கு தெரிவிக்கப்பட்ட பிறகு, அவர் தனது தவறுக்கு வருந்துவதாக குறிப்பிட்டு அதை ஏற்றுக் கொண்டு 04.12.2017ம் தேதியன்று ஒரு கடிதம் வழங்கி அதன்படி 25.12.2017ம் தேதிக்குள் செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். அதனால் எதிரி கேட்டுக்கொண்ட பிறகு புகார்தாரர் தரப்பில் மீண்டும் 26.12.2017ம் தேதியன்று வசூலுக்காக திருப்பூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் தாக்கல் செய்யப்பட்ட பொழுது, அது 27.12.2017ம் தேதியன்று போதிய பணம் இல்லை என்று திருப்பி விட்டதாகவும், அதனால் 24.01.2018ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை 25.01.2018ம் தேதியன்று பெற்றுக்கொண்டு பணமோ, உரிய பதிலோ கூறவில்லை என்று குறிப்பிட்டு இந்த புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3**. மேற்படி புகாரை திருப்பூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ள விபரம் குறித்து உறுதிசெய்த பின்பு, எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் பற்றி விசாரணை நீதிமன்றம் விளக்கிக்கூறி வினா எழுப்பியதில், எதிரி பொய்வழக்கு என்று கூறியுள்ளார். அதன்பின்பு இவ்வழக்கானது திருப்பூர், நீதித்துறை நடுவர் (விரைவு) நீதிமன்றத்திற்கு

அனுப்பப்பட்டுள்ளது. பின்னிட்டு இவ்வழக்கினை சாட்சிகளின் விசாரணை மூலம் மேல்நடத்தியுள்ளது.

**4.** விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சி எதுவும் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை விபரம்:**

**5.** எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம், பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, மேற்படி குற்றத்திற்காக எதிரிக்கு 6 மாதங்கள் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும், புகார்தாரருக்கு இழப்பீடாகக் காசோலைகளுக்குரியத் தொகைகளான ரூ.9,98,358/–ஐ எதிரி செலுத்த வேண்டும் என்று பிரிவு 357 (3) கு.வி.மு.ச–ன் படி உத்தரவிட்டும், மேலும் இழப்பீட்டு தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில், மேலும் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255 (2)–ன் படி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**6.** மேற்படி தீர்ப்பின் மீது குறையுற்ற இந்த மேல்முறையீட்டாளர்/ எதிரி மேற்படி விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யக் கோரி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**மேல்முறையீட்டாளர்/ எதிரியின் மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:**

7. விசாரணை நீதிமன்றத்தில் இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் அவருடைய தரப்பு வாதத்தை எடுத்து வைக்க போதிய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

8. மேற்படி வழக்கானது கொரோனா ஊரடங்கு இருந்த நிலையில் 05.08.2021ம் தேதி ம.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும், இந்த மேல்முறையீட்டாளருக்கு மஞ்சள் காமாலை நோயினால் 2021ம் வருடம் ஆகஸ்ட்

மாதத்தில் பாதிக்கப்பட்டு கோவை KMCH மருத்துவமனையில் 23.08.2021ம் தேதியன்று சிகிச்சையில் சேர்ந்து 25.08.2021ம் தேதியன்று விடுவிக்கப்பட்டதாகவும், மேலும் 26.08.2021 முதல் 28.09.2021 வரை தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சையில் இருந்ததாகவும், அதனால் அவருடைய மருத்துவ காரணங்களுக்காக விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்யவும், தனது தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்தவும் முடியவில்லை என்றும், மேற்படி நியாயமான காரணங்களால்தான் இந்த மேல்முறையீட்டாளர் வழக்கை முறையாக நடத்தவில்லை என்றும், அதனால் விசாரணை நீதிமன்றம் முறையாக வாய்ப்புகள் வழங்காமலேயே இந்த மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று தீர்மானித்து தண்டனை வழங்கி மிகப் பெரிய அநீதி இழைத்ததாக கூறி மேற்படி மேல்முறையீட்டாளருக்கு உரிய வாய்ப்புகள் வழங்கி மேல்முறையீட்டாளர் தரப்பு ஆவணங்களையும், சாட்சிகளையும் தாக்கல் செய்து சட்டப்படியான மறுபயன் மேற்படி காசோலைக்கு இல்லை என்று நிரூபிக்க வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மேல்முறையீட்டினை அனுமதித்து, மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு S.T.C.No.215/2018 வழக்கில் கடந்த 27.09.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

9. இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

10. இந்த வழக்கை தீர்மானம் செய்வதற்கு வசதியாக விசாரணை நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளதை போலவே இந்த மேல்முறையீட்டாளரை எதிரி என்றும், எதிர்மேல்முறையீட்டாளரை புகார்தாரர் என்றும் இதற்கு பின்னிட்டு குறிப்பிடப்படும்.

11. ஆகவே இந்த மேல்முறையீட்டில் பிரச்சனை யாதெனில்,

i) எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு 138–ன் கீழான குற்றச்சாட்டு எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

ii) விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு சரியானதா?

iii) மேல்முறையீட்டில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>

12. இந்த வழக்கில் குற்ற முறையீட்டாளர்/ புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138–ன் கீழ் தனி புகார் தாக்கல் செய்யப்பட்டு, அதன் விசாரணையின் முடிவில் விசாரணை நீதிமன்றம் எதிரியை குற்றவாளி என முடிவு செய்து, மேற்படி குற்றத்திற்காக எதிரிக்கு 6 மாதங்கள் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும், புகார்தாரருக்கு இழப்பீடாகக் காசோலை தொகையான ரூ.9,98,358/–ஐ எதிரி செலுத்த வேண்டும் என்றும், மேலும் இழப்பீட்டு தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில், மேலும் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

13. மேற்படி மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் சமயத்தில், மேல்முறையீட்டாளர் கடந்த 30.04.2024ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், அதனால் மேற்படி எதிரிக்கு எதிரான தண்டனை வழங்கிய குற்றச்சாட்டுகள் அற்று போய்விட்டது.

14. ஆனால் மேற்படி மேல்முறையீட்டாளர் தரப்பில் எதிரிக்கு எதிராக சிறை தண்டனை மட்டும் விதிக்கப்படாமல் காசோலைத் தொகை இழப்பீடாக வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி இழப்பீட்டு தொகையை பொறுத்து அவருடைய வாரிசுகளிடமிருந்து வசூல் செய்ய இந்த புகார்தாரருக்கு உரிமை உள்ள நிலையில், அவருடைய வாரிசுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று கூறி மேல்முறையீட்டாளரின் மனைவியான நான்சி பிரகாஷ் என்பவரை எதிர்மேல்முறையீட்டாளராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு, இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு இந்த நீதிமன்றம் கடந்த 25.10.2025ம் தேதியன்று Cr.M.P. No.1/2025ன் கீழ் மேற்படி மனுவை அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு குற்றம் சாட்டப்பட்ட

நபரை குற்றவாளி என்று தீர்மானித்து சிறை தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டு அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட நிலையில், மேல்முறையீட்டாளர் இறந்துவிட்டாலும் கூட, மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 394(2)ன் படி மேற்படி குற்றம் சாட்டப்பட்ட நபர் இறந்துவிட்டாலும் கூட, அபராத தொகையை பொறுத்து மேல்முறையீட்டை நிர்ணயம் செய்ய அதிகாரம் உள்ளது. ஆகவே மேற்படி மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையை பொறுத்து குற்றச்சாட்டு அற்றுப் போய்விட்டாலும் கூட, காசோலை தொகையான ரூ.9,98,358/-ஐ இறந்து போன எதிரி புகார்தாரருக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்று குறிப்பிட்ட நிலையில், அதனைப் பொறுத்து விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு சரியானதா என்பதை பொறுத்து மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

**15.** இது குறித்து மேற்படி புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் நிறுவனத்தால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சாட்சியான கோபால்சாமி என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேலும் மேற்படி காசோலை ம.சா.ஆ.2 ஆகவும், வங்கியில் இருந்து திருப்பப்பட்ட Return Memo ம.சா.ஆ.3 ஆகவும், மேலும் எதிரிக்கு வழங்கிய சட்டப்படியான அறிவிப்பு ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மேற்படி எதிரியின் தரப்பில் மேற்படி காசோலை தன்னுடைய வங்கிக்கான கணக்கிற்கு உரியது அல்ல என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றோ எவ்வித எதிர்வாதமும் செய்யவில்லை. மேலும் இந்த புகார்தாரர் தரப்பு சாட்சியான ம.சா.1ஐ இந்த எதிரி தரப்பில் எவ்வித குறுக்கு விசாரணையும் செய்யவில்லை. அதேபோல் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) கேள்வியின் போது கூட பொய் வழக்கு என்று மட்டுமே எதிர்வாதம் செய்துள்ளாரே தவிர, குறிப்பிட்டு எந்த ஒரு எதிர்வாதமும் செய்யவில்லை.

**16.** அதே சமயம் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், எதிரி தரப்பில் எந்த ஒரு சாட்சிகளையும் விசாரிக்கவில்லை. இது சம்பந்தமாக இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் எதிரி உடல்நிலை சரியில்லாமல்

Scan the code using 'e Courts Services' mobile application download from play store

மருத்துவ சிகிச்சையில் இருந்ததாகவும், போதிய வாய்ப்புகள் வழங்காமலேயே விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை பரிசீலிக்கும் பொழுது, கடந்த 06.08.2018ம் தேதியன்றே இந்த வழக்கில் புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு 05.04.2021ம் தேதியன்று இந்த புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட நிலையில், கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழான கேள்விகள் வைக்கப்பட்டிருந்ததும் கூட பலமுறை வாய்ப்புகள் வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையில், பின்னிட்டு எதிரி தரப்பு சாட்சியங்களும் ஆஜர்படுத்தாத நிலையில் தான் 27.09.2021ம் தேதியன்று விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138ன் கீழ் தாக்கல் செய்யப்படும் புகார்களை சுருக்கு முறையில் விசாரித்து 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் போதிய வாய்ப்புகளை இந்த எதிரிக்கு 2018ம் வருடத்தில் இருந்து சுமார் 3 வருடங்களுக்கு மேல் 27.09.2021 வரை வழங்கியுள்ளது. ஆகவே இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தரப்பில் கூறப்படும் காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே இந்த வழக்கில் மேற்படி காசோலை உரிய மறுபயனுக்காக வழங்கப்படவில்லை என்பதற்கு எவ்வித முகாந்திரங்களும் காணப்படவில்லை என்றும், ஆகவே விசாரணை நீதிமன்றம் இது குறித்து முறையாகவே மேற்படி மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று முடிவு செய்து காசோலை தொகையை இழப்பீடாக வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது என்றும், அதில் இந்த நீதிமன்றம் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று முடிவு செய்து மேற்படி இழப்பீட்டு தொகையை பொறுத்து மட்டும் இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கின் சங்கதிகளை பொறுத்து இந்த குற்றவியல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக காசோலை தொகையை இழப்பீடாக

Scan the code using 'e Courts Services'
mobile application download from play store

புகார்தாரருக்கு வழங்கவேண்டும் என்ற விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

**17. முடிவாக,** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் S.T.C.No.215/2018 வழக்கில் 27.09.2021ம் தேதியில் மேல்முறையீட்டாளர் /எதிரிக்கு எதிராக வழங்கிய சிறை தண்டனை அற்றுபோய் விட்ட நிலையில், காசோலை தொகையை இழப்பீடாக புகார்தாரருக்கு வழங்கவேண்டும் என்ற விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2026.04.02 17:53:49 +0530

**இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருப்பூர்.**

**நகல்:**

நீதித்துறை நடுவர் (விரைவு) நீதிமன்றம், திருப்பூர்.

This Judgment was uploaded in CIS on 02.04.2026 as per Circular of the Honourable High Court in R.O.C. No.83338-A/2024/F1 dated 22.07.2025.

Scan the code using ‘e Courts Services’
mobile application download from play store

FAIR/DRAFT/COPY OF JUDGMENT
Crl.A .No.76/2021
Dated : 02.04.2026
II ADJ, Tiruppur.